www.tamilarangam.net

# பிரித்தானிய தமிழ் ஒன்றியம்

Eelam House, 202 Long Lane, London SE1 4QB

01/11/2001

அன்புடையீர், வணக்கம்

ஆறவது தமிழர் விளையாட்டு விழாவில் நடைபெற்ற முதலாவது தடகள – மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து சிறப்பளித்தமைக்கு நன்றி. பிரித்தானியாவெங்கிருந்தும் 127 சிறார்கள் பங்கு பற்றி உள்ளார்கள். விழா ஏற்பாட்டாளர்களுடன் தோளோடு தோள் நின்று உதவி ஊக்குவித்த பெற்றோர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் வருடம் தோறும் இவ் விழாவின் வெற்றிக்கு மேலும் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

திடகாத்திரமான ஆரோக்கிய வாழ்வு முறையை நெறிப்படுத்துவதே பிரித்தானிய தமிழ் ஒன்றியத்தின் தொலை நோக்கான முனைப்பு. இதற்காக பிரித்தானிய தமிழ் ஒன்றியம், தமிழ்ச்சமூகத்தினிடையே மெய்வல்லுனர் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. இதன் ஒரு அம்சமாக, பிரித்தானிய தமிழ் ஒன்றியம் இளைய தலைமுறையை ஐரோப்பிய / பொதுநலவாய நாடுகளின் மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்குவிக்கின்றது.

முதல் நிகழ்விலேயே நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டமை பிரித்தானிய தமிழ் ஒன்றியத்திற்கு ஓர் ஊக்கவிசையாக அமைந்துள்ளது. இந்த நிகழ்வின் வெற்றியை முற்கொண்டு, பிரித்தானிய தமிழ் ஒன்றியம் மேலும் முயன்று இருநூறுக்கு மேற்பட்ட சிறுவர்களை அடுத்த நிகழ்வில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் இயங்குகின்றது. ஏழாவது தமிழர் விளையாட்டு விழா 2002ம் ஆண்டு யூலை மாதம் 28ம் நாள் Norman Park, Kent இல் நடைபெறும். நீங்கள் அந்நிகழ்ச்சில் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தமிழர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர் பெயர்ப் பட்டியல் http://www.britishtamils.org என்ற இணையத்தளத்தில் வெளியிடவுள்ளோம். இதை விளையாட்டுத்துறையில் எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான ஒரு குறியீடாக எமது சமுதாயம் கருதும் என எண்ணுகிறோம். இம்முயற்சி, விளையாட்டு வீரர்களுக்குத் தங்கள் பங்களிப்பின் முக்கியத்துவத்தைத் தமிழர் சமுதாயம் உன்னிப்பாக எதிர்பார்க்கிறதென்பதைப் புரியவைக்கும் என பிரித்தானிய தமிழ் ஒன்றியம் கருதுகின்றது. அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வாய்த்த ஒரு மைல் கல்லாக இதனை உபயோகிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம். இணையத்தளத்தில் தம்பெயர் வருவதை விரும்பாத உறுப்பினர்களோ, அவர்களின் பெற்றோர்களோ எம்முடன் தொடர்புகொள்ளவும்.

பூங்கா நிர்வாகிகளால் எம்மீது திணிக்கப்பட்ட நேரக்கட்டுப்பாட்டினால் அஞ்சலோட்டப் போட்டிக்கான வெற்றிக்கிண்ணங்கள் நிகழ்ச்சியன்று வழங்கமுடியவில்லை. எமக்கு **முன்னறிவித்த** பின் சான்றிதழுடன் ஈழம் இல்லத்திற்கு வந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

வெற்றிக்கிண்ணப் பரிசளிப்பின்போது நடைபெற்ற இடையூறுக்கு வருந்துகிறோம். இந்நிகழ்வில் எமக்குக் கிடைத்த அனுபவங்களின் மூலம் வருங்காலங்களில் போட்டியை வெற்றிகரமாகத் தடங்கல் எதுவுமன்றி நடாத்த உறுதி கூறுகிறோம். சென்ற நிகழ்வில் 10 சதவீதமானோரே முடிவுத் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்திருந்திருந்தனர். 70 சதவீதமானோர் முடிவுத்திகதிக்குப்பின்னரும் 20 சதவீதமானோர் போட்டி நிகழ்ச்சி அன்றும் விண்ணப்பித்தனர். இதன்காரணமாக நிகழ்ச்சியைக் கொண்டு நடாத்துவததில் சில நிர்வாகச்சிக்கல்கள் ஏற்பட்டன. இதனைக்கருத்திற் கொண்டு அடுத்து வரும் நிகழ்வுக்கு விண்ணப்பப் படிவங்கள் முடிவுத்திகதிக்குப்பின் ஏற்கப்பட மாட்டாது என்பதை அறியத்தருகிறோம். இந்நிகழ்வை மேலும் சிறப்பாக நடாத்தத் தங்களிடமிருந்து ஆக்க பூர்வமான யோசனைகள் வரவேற்கப்படுகின்றன. **"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை ஒருங்கிணைந்து நிலைநிறுத்துவோம்."**

நன்றி.

Dear fellow Tamils,

We are pleased to thank you for your participation in the 1st Track & Field events at the 6th Tamil Sports Festival. One hundred and twenty seven (127) children from all over the Briton took part in the event. We like to thank all parents who helped us to make the event a success. We look forward for your contribution and cooperation to make the event outstanding in the years to come.

A long-term vision of BTA is to promote a healthy life style. BTA is promoting athletic awareness among the Tamil community to achieve it's long-term vision. As a part of the campaign, BTA encourages Tamil youths to participate in European / Commonwealth athletic events.

BTA is well encouraged by the fact that more than 100 children participated at the very first event. We like to build from this success and set us a target of 200 participants for next year. The 7th Tamil Sports Festival is on 28th of July 2002 at the Norman Park, Kent . We welcome you to participate in this event.

The list of winners at the Tamil sports festival will be published at the web site http://britishtamils.org. BTA wishes to promote this as an icon for improving our society's participation in sports. BTA anticipates that this will make the participants to feel that, their roll in the Tamil Sports Festival has been vital and well noticed by the community. We sincerely hope that the participants would use this as a milestone to build their prosperous future. Anyone who doesn't want to see their name or parents who don't want to see their children's name on the web site please contact BTA.

The trophies for the relay winners were not awarded due to the time limit imposed on us by the venue authorities. Please **contact** us at BTA and **arrange a time** to pick your trophy at Eelam house. Please bring your certificate with you to collect the trophy.

We regret for any inconveniences felt at the event, especially the confusion during the trophy presentation. We have learnt from the event and will try our best not to make the same mistake again and to improve as much as we can. This year only less than 10% of the participants entered the event before the closing date. 70% of the participants enrolled after the closing date and 20% applied on the day itself. This has considerably stretched our resources to organise the event as expected. Next year we will not accept any late entries. Suggestions are always welcome. **"Health is Wealth, Lets achieve it together"**

Regards.

Tel 020 7403 4554 Fax 020 7403 1653
Web www.britishtamils.org e mail info@britishtamils.org

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்